# திராவிட மொழிகளின் தொடரமைப்பு

## குறிப்புச் சட்டம்

* முன்னுரை
* சொற்களின் நிலை
* இயைபு
* அகராதி வடிவும் பொருட் குறிப்பும்
* வினைப்பாகுபாடு
* தொழிற்பெயர் ஏற்பன
* வினைமுற்றும் செயப்படு பொருளும்
* முடிவுரை

## முன்னுரை :-

சொற்கள் முறைப்படி அமைந்து பொருளைத் தரும்போது அது சொற்றொடர் என்று கருதப்படும். தொடர்களில் அமையும் சொற்களின் சேர்க்கை பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட மரபுப்படியே அமைகின்றது. இம்மரபு மொழிக்கு மொழி மாறுபடுதல் இயல்பே. சான்றாக, ஆங்கிலம் மொழியில் அதிகமாக வினைச் சொற்கள் முற்றுத் தொடர்களின் நடுவிலும் தமிழில் வினை முற்றுக்கள் தொடரின் இறுதியிலும் அமைவதைக் காண்கிறோம். ஐரிஷ் போன்ற சில மொழிகளில் வினைச்சொற்கள் தொடரின் முதலில் நிற்றலுமுண்டு.

தொடரமைப்பைப் பொறுத்தவரையில் திராவிட மொழிகள் இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலிருந்து பல வகையிலும் மாறுபடுவதைக் காண்கிறோம். இதனைக் குறித்து இக்கட்டுரையில் விரிவாக காண்போம்.

## சொற்களின் நிலை :-

ஒரு மொழியின் அமைப்பொட்டத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள அம்மொழியின் தொடரமைப்பு பற்றிய அறிவு மிகவும் தேவை. மொழி ஆய்வுக்கு ஒலியன் பற்றிய ஆய்வும்

உடம்பு என்றால் தொடர் பற்றிய ஆய்வு உயிராக அமைகின்றன.

திராவிட மொழிகளில் பொதுவாகப் பெயரடைகள் பெயர்களுக்கு முன்னர் அமைகின்றன. பெயரடைகள் தனித்து இயங்கும் ஆற்றல் அற்றனவாக பெயர்த்தொடரின் உறுப்பாக இம்மொழிகளில் அமைகின்றன.

வினையடைகள் பெயரடைகளைச் சிறப்பிக்கும் இடங்களும் இம்மொழிகளில் உள்ளன. அவ்வாறு அமையும் இடங்களில் வினையடைகளும் பெயர்த்தொடரின் ஒரு பகுதியாகவே செயல்படும்

மலையாள மொழியைப் பொறுத்தவரையில் வினைச்சொற்களைச் சிறப்பிக்கும் வினையடைகள், பெயரடைகளைப் போலன்றித் தனித்து இயங்கும் தன்மைபெற்றுத் திகழ்கின்றன. இந்நிலையில் அவை வினைச்சொற்களிலிருந்து வேறுபட்ட தனித்த உறுப்பாகச் செயல்படும் தன்மையுடையன.

பெயரடைத் தொடர்கள் இம்மொழியில் பெயர்த்தொடர்களின் பகுதியாகச் செயல்பட, வினையடைத் தொடர்கள் வினைச் சொற்களோடு நெருங்கிய தொடர்பு கொண்ட போதும் தனித்தியங்கும் ஆற்றல் உடையன.

**இயைபு :-**

இந்தி போன்ற வட இந்திய மொழிகளில் பெயரடைக்கும், அதை அடுத்து வரும் பெயருக்குமிடையே எண், பால், ஆகியவற்றில் இயைபுகள் இருப்பதைக் காணலாம்.

(எகா)

அச்சா லட்கா - நல்ல பையன்

அட்சி லட்கி - நல்ல பெண்

அச்சே லட்கே - நல்ல பையன்கள்

திராவிட மொழிகளில் இத்தகைய இயைபு கிடையாது. நல்ல பையன், நல்ல பெண் என்று பெயரடைகள் பெயர்களோடு இயைபு இன்றியே வருகின்றன. இதற்கு கோண்டி மொழி மட்டும் விதிவிலக்காக உள்ளது. இம்மொழியில் பெயருக்கும் பெயரடைக்கும் பால், இட இயைபு உண்டு

திராவிட மொழிகளில் முற்றுத் தொடர்களின் இறுதியில் அமையும் வினைமுற்று வடிவங்கள் எழுவாயோடு எண்ணால் இயைபு கொண்டுள்ளன.

எ.கா

நான் வந்தேன் - ஒருமை } தன்மை
நாம் வந்தோம் - பன்மை

நீ வந்தாய் - ஒருமை
நீர் வந்தீர் - பன்மை
நீங்கள் வந்தீர்கள் - மரியாதைப் பன்மை } முன்னிலை

கோடா - ஆன் கொட்பேன் (நான் கொடுப்பேன்) - தன்மை ஒருமை

நீ தின்க்லாரி (நீ தின்றாய்) - முன்னிலை

படர்க்கை மூவிடப் பெயரின் வினைமுற்றுக்கள் எழுவாயோடு திணை, பால், எண் ஆகிய நிலைகளில் இயைபு கொண்டுள்ளன.

எ.கா

அவன் வந்தான் - ஆண்பால் } ஒருமை
அவள் வந்தாள் - பெண்பால்
அவர் வந்தார் - பலர்பால் - பன்மை } உயர்திணை

அது வந்தது - ஒன்றன்பால் - ஒருமை }
அவை வந்தன - பலவின்பால் - பன்மை } அஃறிணை

ஆங்கிலம் போன்ற மொழிகளின் தொடர்களில் முந்து நிலைகள் அமையுமிடங்களிலெல்லாம் தமிழில் பிந்து நிலைகளே அமைகின்றன.

எகா on the table - ஆங்கிலம்
மேசையின் மேல் - தமிழ்

திராவிட மொழிகளில் வினைச்சொற்களின்றியும் தொடர்கள் அமைகின்றன. இவ்வாறு பெயர் பயனிலையாக வரும் திராவிட மொழிகளின் தொடர்களுக்கு இணையாக உள்ள ஆங்கிலத் தொடர்களில் is, are போன்ற துணை வினைகள் இணைக்கப்படுகின்றன.

எகா அவன் இராமன்
He is Raman

பல பெயர்கள் தொடர்ந்து வரும்போது அவற்றை இணைப்பதற்கு 'உம்' என்னும் இடைச்சொல்லை அப்பெயர்கள் எல்லாவற்றோடும் இணைக்கும் முறையைத் தமிழ் போன்ற திராவிட மொழிகளில் காண முடிகிறது. ஆனால் ஆங்கிலம் போன்ற மொழியில் 'உம்'மை இடைச் சொல்லுக்கு நிகரான 'and' என்னும் இடைச்சொல் அவற்றின் இறுதியில் மட்டுந்தான் வருகின்றன.

(எ.கா) இராமனும், சீதையும், இலக்குவனும் வந்தனர் - தமிழ்
Rama, Sita and Lakshmana came - ஆங்கிலம்

ஆங்கிலத் தொடர்களில் சொற்களுக்கிடையேயுள்ள உறவு இலக்கண உறவாக அமைய திராவிட மொழித் தொடர்களில் அவ்வுறவு உருபன்களைப் பொறுத்ததாக அமைகின்றது.

ஒரு தொடரிலுள்ள சொற்களை மாற்றியமைத்தாலும் பொருள் மாறிவிடுகின்றது. இந்நிலை தமிழ் போன்ற திராவிட மொழிகளில் இல்லை.

எ.கா
இராமன் இராவணனைக் கொன்றான் > இராவணனை இராமன் கொன்றான் - பொருள் மாறவில்லை

Rama killed Ravana > Ravana killed Rama
பொருள் மாறுபடுகின்றன.

அகராதிவடிவும், பொருட் குறிப்பும் :-

மொழியின் தொடர்களை ஆராய இலக்கண விதிகளான புறவடிவம் பற்றிய விதிகளை விடவும் பொருள் பற்றிய விதிகளை அறிதல் மிகவும் தேவை. மனிதனுடைய மொழி அவன் வாழும் சூழ்நிலைகளோடும், சமுதாயப் போக்குகளோடும், இணைபிரியா தொடர்பு கொண்டுள்ளது.

அகராதி வடிவங்கள் பொருளைப் பெறும் போது மட்டுமே கருத்துப் பரிமாற்றத்திற்குரிய கருவியாக மொழி செயல்பட முடியும். எனினும் புறவடிவங்களைப் புறக்கணிக்கும் மொழி சிறந்த முறையில் கருத்துப் பரிமாற்றக் கருவியாகப் பயன்படுவதுண்டு. எனவே மொழியை, குறிப்பாகப் பேச்சு மொழியை எடுத்துக் கொள்வோமென்றால் இலக்கண விதிகளை விட ஏற்றுக் கொள்ளும் நிலையே இன்றியமையாதது

சான்றாக
1. உண்மை அவனை அச்சுறுத்தியது
2. நாய் அவனைத் துரத்தியது
3. அனுமன் இராவணனைப் பயமுறுத்தினான்

இம்மூன்று தொடர்களும் வேறுபட்ட அமைப்பினையுடையன. இவற்றுள் முதற்றொடரின் எழுவாய் விரவுப்பெயராகவும், இரண்டாம் தொடரின் எழுவாய் அஃறிணைப் பெயராகவும், மூன்றாம் தொடரின் எழுவாய் உயர்திணைப் பெயராகவும் உள்ளன.

<u>வினைப் பாகுபாடு</u> :

ஆங்கில மொழியில் வினைச் சொற்களைச் செயப்படுபொருள் ஏலாதன என்று இரு கூறுபடுத்துவர். இக்கூறுபாடு திராவிட மொழிகளுக்கும் பொருந்தும்.

எ.கா. அவன் மறைந்தான்
அவன் எழுதினான்.

இவ்விரு தொடர்களுள் முதற்றொடர் செயப்படுபொருளை ஏற்கவில்லை ஆனால் இரண்டாம் தொடர் செயப்படுபொருளைப் பெற்று நிற்கும்.

<u>தொழிற்பெயர் ஏற்பன</u>

செயப்படுபொருளை ஏற்றும், ஏற்க மறுத்தும் நிற்கும் வினைச் சொற்களைப் போல சில வினைச்சொற்கள் தொழிற்பெயரை ஏற்றும் சில ஏற்க மறுத்தும் நிற்பதைக் காணலாம்

<u>எ.கா.</u> 1. நான் ஓடுவதை விரும்புகிறேன்
2. நான் ஓடுவதைக் கொடுப்பேன்

இவ்விரு தொடர்களில் முதலில் காட்டப்பட்டிருக்கும் தொடர் இலக்கண அடிப்படையிலும், பொருள் அடிப்படையிலும் சரியாகவே அமைகின்றது. ஆனால், இரண்டாவது காட்டப்பட்டிருக்கும் தொடர் புற அமைப்பில் சரியாகக் காணப்படினும் பொருளடிப்படையில் நோக்கும்போது தவறுடையது

வினைச்சொற்கள்
1. தொழிற்பெயர் ஏற்பன
2. தொழிற்பெயர் ஏற்க மறுப்பன

என பிரிக்கலாம்.

ஒவ்வொரு தொடரும் பல்வேறு பொருட்களைத் தன் அக அமைப்பில் பெற்றுத் திகழக் காணலாம்.

சான்றாக "அழகிய இராமனும் சீதையும் காதலித்தனர்" என்ற தொடரை எடுத்துக் கொள்வோம். இத்தொடரிலுள்ள 'அழகிய' என்ற சொல் பொருள் மயக்கத்தை உண்டு பண்ணி,

1. அழகிய இராமன் காதலித்தான்
2. அழகிய சீதை காதலித்தாள்
3. அழகிய சீதையும் அழகிய இராமனும் காதலித்தனர்
4. அழகிய சீதை அழகிய இராமனைக் காதலித்தாள்
5. அழகிய சீதை இராமனைக் காதலித்தாள்

என்பன போன்ற புதை வடிவங்களைத் தோற்றுவித்து வருகின்றது. இரு' என்னும் வினைச் சொல் காலப்போக்கில் to be என்னும் பொருளுடைய துணை வினையாகப் பயன்படுத்தப்பட்டதன் விளைவாக

வந்து இருந்தேன்
வந்து இருக்கிறேன்
வந்து இருப்பேன்

என்பன போன்ற தொடர்கள் தோன்றத் தொடங்கியுள்ளன.

முடிவுரை:-

சிறு தொடர்களை இணைத்துக் கூட்டுத்தொடர்களை அமைக்கும் போக்கு தற்காலத் தமிழில் மிகுந்துள்ளது. இத்தகைய வளர்ச்சி நிலைகளைத் திராவிட மொழிகள் அனைத்திலும் நாம் காணமுடிகின்றது.

## மாற்றிலக்கணக் கோட்பாடுகள்

தொடரியல் பற்றி ஆராய்ந்த கொள்கைகளில் மாற்றிலக்கணக் கொள்கையே மிகச்சிறந்த கொள்கையாகக் கருதப்படுகின்றது. சோம்ஸ்கி என்னும் அறிஞர் இன்றைய மாற்றிலக்கணத்தின் தந்தையாகக் கருதப்படுகின்றார். இவரது 'தொடரியல் அமைப்பு' என்ற நூல் மொழியியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். இந்நூலில் கூறப்பட்ட கருத்துக்களைக் கூட இவர் 'தொடரியல் கொள்கைகளின் கூறுகள்' என்ற நூலில் சிறிது மாற்றியமைத்தார். மாற்றிலக்கணத்தின் இயல்புகளை,

(i) ஆய்வு நிலையில் வேறுபாடு.
(ii) வாக்கியங்களின் தொடர்பைக் குறிப்பிடுதல்.
(iii) அமைப்புப் பொருள் மயக்கத்தைக் குறிப்பிடுதல்.
(iv) சொற்பொருள் மயக்கத்தைக் குறிப்பிடுதல்.
(v) பெயர்ப் பயனிலை அமைந்த வாக்கியங்களை உருவாக்கப் பயன்படல்.
(vi) திண்மை நிலை
(vii) அண்மைநிலை
(viii) உணர்நிலை.

என்ற நிலையில் ஆராயலாம். இலக்கணம் எனின் அம்மொழியில் காணப்படும். அல்லது உருவாக்கப்படுகின்ற கணக்கற்ற இலக்கண வாக்கியங்களை உருவாக்கும் நிலையில் அமைந்திருக்க வேண்டும். இலக்கணம் பின்வரும் மூன்று பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) குறிப்பிட்ட சில விதிகள்.
(ii) அளவற்ற வாக்கியங்கள்.
(iii) இலக்கணமற்ற வாக்கியங்கள்

எதுவும் உருவாகாமலும் இருக்கவேண்டும். இந்நிலையில் தமிழ் மொழியின் இலக்கணம் தமிழ்மொழியில் எப்போது காணப்படுகின்ற வாக்கியங்களுக்கு மட்டுமின்றி உருவாகும் வாக்கியங்களுக்கும் இலக்கணம் நிறைவுடையதாக அமையவேண்டும். தமிழகம் தந்த மொழியியல் பேராசிரியர் டாக்டர். ஏ. அகத்தியலிங்கம் அவர்களுடைய நூலொன்றில் தமிழ் மொழியின் தொடரியலை மாற்றிலக்கண முறையில் ஆராய்ந்தார்.

இவ்வமைப்பு கொடுக்கும் பொருண்மையினை உணர்ந்து வரற்குரிய சொல்லுறுப்புகள் முழுவதும் இல்லாத நிலையிலும் சிலவற்றின்மூலம் உரிய பொருண்மையினை வெளிப்படுத்தும் அமைப்பே புற அமைப்பாகும். புதைநிலையைப் புறநிலையோடு தொடர்புபடுத்துவனவே மாற்றல் விதிகளாகும். புணர்ச்சியில் விகாரமானது தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படுதல் போல மாற்று விதிகளும் அடிப்படையில் மூவகைப்படும். 'தோன்றல் மாற்று விதி' 'கெடுதல் மாற்று விதி' 'திரிதல் மாற்று விதி. இவை மூன்றும் அடிப்படை மாற்றுவிதிகளாகும். இடமாற்றம் என்பதைத் திரிதலின் புது வகையாகக் கொள்ளலாம்.

கட்டு வாக்கியங்களை விளக்குவதில் மாற்றிலக்கண முறை சிறந்ததாகக் கருதப்படுகின்றது.

1. அது பள்ளிக்கூடம் (அகப்படுத்தும் வாக்கியம்)
2. நான் பள்ளிக்கூடத்தில் படித்தேன் (அகப்படும் வாக்கியம்)

மாற்றிலக்கணம் மூன்று பகுதிகளை உடையது.

(i) தொடரமைப்புப் பகுதி
(ii) மாற்றுவிதிப் பகுதி
(iii) உருபொலியனியல் பகுதி

தொடரமைப்புப் பகுதி :

மாற்றிலக்கணத்தில் இப்பகுதி வாக்கியங்களின் தோற்றத்திற்கு அடிப்படையானது. 'S' என்ற குறியீட்டை அடிப்படையாகக் கொண்டு மற்றைய பகுதிகளைத் தோற்றுவிக்கக் கூடியது.

S → NP VP

NP என்பது பெயர்த் தொடரையும் (Noun Phrase) VP, என்பது வினைத் தொடரையும் (Verb Phrase) குறிக்கும். ஒரு மொழியிலுள்ள வாக்கியம் பெயர்த் தொடராலும் வினைத் தொடராலும் ஆக்கப்பட்டது என்பதைக் காட்டுகிறது. VP என்பதை PP என்றும் (Post Positional Phrase) என்றும் V என்றும் (Verb) விரிக்கலாம்.

VP → PP V

PP என்பது வேற்றுமைத் தொடரையும் V என்பது வினையையும் குறிக்கும். இத்தொடரமைப்பு விதிகளை இவ்வாறு எழுதினால் விளக்கம் கிடைக்கும்.

(i) S → NP VP

(ii) VP → PP V

(iii) PP → NP - ஐ

(iv) NP → இராமன், கண்ணன்

(v) V → அடித்தான்

தொடரமைப்புத் தோற்றுவித்த வாக்கியங்களை மாற்று விதி மாற்றும். இந்த மாற்றுவிதிகள்தாம் வாக்கியங்களுக்கிடையே அமைந்து கிடைக்கும் தொடர்பைக் காட்டுவன. மேலேயுள்ள வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு வினா வாக்கியத்தையும் எதிர் மறை வாக்கியத்தையும் மாற்றுவிதியின் மூலம் கொணரலாம்.

இராமன் + கண்ணன் - ஐ + அடித்தான்

இராமன் - ஆ + கண்ணன் - ஐ + அடித்தான்

இராமன் + கண்ணன் - ஐ + அடித்தான்

இராமன் + கண்ணன் - ஐ - ஆ + அடித்தான்

இராமன் + கண்ணன் - ஐ + அடித்தான்

இராமன் + கண்ணன் - ஐ + அடித்தான் - ஆ

இம்மூன்றில் ஆ-விகுதி பெயரோடும் வினையோடும் சேர்க்கலாம். 'எவன்' என்பதை எழுவாய் இடத்தில் சேர்த்தால்

'எவன் + கண்ணன் - ஐ + அடித்தான்'

என வரும்.

ஒரு வாக்கியத்தில் செய்யப்படும் விதியைத் தனி மாற்று என்றும் இரண்டிற்கு மேற்பட்ட வாக்கியங்களில் செய்யப்படும் விதியைப் பொது மாற்று விதி என்றும் வழங்குவர்.

செய்வினை வாக்கியங்களும் செயப்பாட்டு வினை வாக்கியங்களும் புறத்தோற்றத்தில் வேறுவேறாக இருந்தாலும் அடிநிலையில் அல்லது புதை நிலையில் அவை ஒன்றாக இருப்பதால்தான் அவை இரண்டும் ஒரே பொருளைத் தருகின்றன எனக் கூறுகின்றனர். இந்நிலையில் புதை நிலையைப்பு என்ற கோட்பாடும், பிறந்தன. இரண்டு வாக்கியங்கள் வெவ்வேறு நிலையில் காணப் பட்டாலும் புதை நிலையில் அவை ஒரே பொருளைத் தருகின்றன. என விளக்கம் தருகின்றனர். புதை நிலையை அடிப்படையாக வைத்து இரண்டு அல்லது மூன்று புற நிலைகள் உருவாக்க வேண்டும் எனக் கூறுகின்றனர். இவ்வாறு உருவாக்கும் போது மேற்கொள்ளும் விதிகளை மாற்று விதிகள் என்பர்.

சில விதிகளைக் கொண்டு மிகப்பல வாக்கியங்களைப் படைத்துக் கொள்வதுதான் மாற்றிலக்கணத்தின் சிறப்பாகும். அடிநிலை விதிகளின் படைப்பாற்றலைக் காண்போம்.

1. S → NP VP Aux
2. NP → (Det) N

3. VP —> NP V

4. Aux —> Tns

5. Tns —> Pst

6. Det —> அந்த, ஒரு

7. N —> அம்பிகாவதி, அமராவதி

8. V —> காண்

இந்த எட்டு விதிகளைக் கொண்டு பதினெட்டு வாக்கியங்களைப் படைக்க முடியும்.

1. அம்பிகாவதி அமராவதியைக் கண்டான்
2. ஒரு அம்பிகாவதி அமராவதியைக் கண்டான்
3. அந்த அம்பிகாவதி அமராவதியைக் கண்டான்
4. அம்பிகாவதி ஒரு அமராவதியைக் கண்டான்
5. அம்பிகாவதி அந்த அமராவதியைக் கண்டான்
6. ஒரு அம்பிகாவதி ஒரு அமராவதியைக் கண்டான்
7. ஒரு அம்பிகாவதி அந்த அமராவதியைக் கண்டான்
8. அந்த அம்பிகாவதி ஒரு அமராவதியைக் கண்டான்
9. அந்த அம்பிகாவதி அந்த அமராவதியைக் கண்டான்
10. அந்த அமராவதி அம்பிகாவதியைக் கண்டாள்
11. ஒரு அமராவதி அம்பிகாவதியைக் கண்டாள்
12. அந்த அம்பிகாவதி அமராவதியைக் கண்டான்
13. அமராவதி ஒரு அம்பிகாவதியைக் கண்டாள்
14. அமராவதி அந்த அம்பிகாவதியைக் கண்டாள்
15. ஒரு அமராவதி ஒரு அம்பிகாவதியைக் கண்டாள்
16. ஒரு அமராவதி அந்த அம்பிகாவதியைக் கண்டாள்
17. அந்த அமராவதி ஒரு அம்பிகாவதியைக் கண்டாள்
18. அந்த அமராவதி அந்த அம்பிகாவதியைக் கண்டாள்

## உருபொலியனில் பகுதி :

மொழியியலார் கூறும் புணர்ச்சி விதிகளான உருபொலியனிய -லாகும். தொடரமைப்பும் மாற்று விதிப் பகுதியும் செயல்பட்ட பின்பு இது செயல்படும். ஒலி வடிவையும் வரிவடிவையும் கொடுப்பது இதன் செயலாகும்.

சோம்ஸ்கியின் கோட்பாடுகளைக் கொண்ட மாற்றிலக் கணமும் கால போக்கில் சில மாற்றங்களைக் கண்டது. சோம்ஸ்கி அவர்கள் தொடரியலே முக்கியமானது என்றும் அதுவே பொருளுக்கு அடிப்படை என்றும் கருதினார். மக்காலே லேக்காப் போஸ்டல் போன்றவர்கள் பொருளே முக்கியமானது என்றும் கூறி, அக்கருத்துக்கு அரணாகப் பல ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் வெளியிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களும் வெளியிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களது கோட்பாடுகளை 'உருவாக்குப் பொருண்மைக் கோட்பாடுகள்' என வழங்குவர்.